
ஓம் ஸ்ரீ கணேசாய நம

# பஞ்சகணபதி

## நலமே வாழ ஒரு நவீன கொண்டாட்டம்



பஞ்சகணபதி ஒரு நவீன இந்து கொண்டாட்டமாகும். கணங்களின் தலைவரான ஐந்து முகங்கொண்ட மகா கணபதியை வழிபடும் திருவிழாவாகும். மார்கழி மாதத்தில் கொண்டாடப்படும் 30 நாள் மார்கழிப் பிள்ளையார் காலத்தில் டிசம்பர் 21 தொடக்கம் டிசம்பர் 25 வரையான 5 நாள் வீட்டுக் கொண்டாட்டமாகும். உத்தராயண ஆரம்ப காலம் பல தேசங்களில் சகல சமயத்தவர்மத்தியிலும் ஒரு கொண்டாட்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது. விசேடமாக இந்துக்கள் மத்தியில் இது பிள்ளையார் வழிபாட்டுக்குரிய பாரம்பிய பருவ காலமாகும் இது இந்து வேதவானவியலின் படி சூரியன் தெற்குநோக்கிய பயணத்தை முடித்துக்கொண்டு மீண்டும் வடதிசை நோக்குப் பயரம் ஆரம்பிக்கும் காலமாகும். இந்துக்கள் நத்தார் கொண்டாடுவதில்லையாதலால் கொண்டாடுபவர்களுடன் தாமும் பொருள் பொதிந்த விதத்தில் ஈடுபடச் சிரமமுறுகின்றனர். டிசமபர் 25ல் நீங்கள் ஏன் பரிசுகள் பெறுவதில்லை? என்று கேட்கப்படும் பொழுது பிள்ளைகள் சங்கோஜபடுகிறார்கள். உறவினர்கள் அயலவர்கள் நண்பர்கள் தொழிற் கூடச் சகபாடிகள் என்பவர்களுடன் பரிசுகளும் வாழ்த்து மடல்களும் ஒருவர்க்கொருவர் இக் கொண்டாட்ட காலத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியத்தை இளைஞர்கள் உணருகிறார்கள். பஞ்சகணபதி என்பது இத்தகைய வழிபாடு பரிசளிப்பு கொண்டாட்டம் ஆகியவற்றுக்குரிய இயற்கைப்பருவத்தின் இந்து வெளிப்பாடாகும். டிசம்பர்25ம் அதற்கு முந்திய பிந்திய நாட்களும் பல சமயத்தவர்க்கும் சமயம் சாராதவர்ககும் கூட உண்மையில் ஒரு வருடாந்த விசேட காலமாகும். உண்மையில் சில குறிப்பிட்ட சமயங்களுக்குரிய சடங்குகளுடன் சமயம்சாராக் கலாச்சார விடுமுறையாக உலகெங்கும்

பிரபலமாயிருப்பது கண்கூடு. இக் கருத்தை மதித்தே ஐக்கிய அமரிக்க உயர்நீதிமன்றம் – கிறிஸ்மஸ் ஒரு சமயம்சாராச் சமூகவிடுமுறை – எனத் தீர்ப்பளித்துள்ளது.

ஆனகாரணத்தால்தான் ஒவ்வொருத்தரும் தமக்கியைந்த வழியில் தம் செல்வத்தை – தமக்கு மிகுதியானவற்றை மற்றையோருக்குக் கொடுத்தும் பகிர்ந்தும் கொண்டாடி மகிழும் காலமாயுள்ளது கிறிஸ்மஸ்.

## பஞ்சகணபதி பூசையறையை உருவாக்குதல்

பஞ்சகணபதி ஓர் ஆலய உற்சவமல்ல. இது சமகால இல்லச்சடங்காகும். கடந்தகாலத்து குற்றம் குறைகளைச் சரிபடுத்தி ஒரு புதிய ஆரம்பத்தை உருவாக்கும் வகையில் இதன் முக்கியத்துவம் கருதி ஐந்துநாட் கொண்டாட்டத்துக்கென கூடத்தின் நடுப்பகுதியில் ஒரு வழிபாட்டிடம் அமைக்கப்படுகிறது. அங்கு மத்தியில் ஒரு மரத்தாலான அல்லது வெண்கலத்தினாலான ஒரு பஞ்சகணபதி உருவம் வைக்கப்படுகிறது. அப்படி ஒரு சிலை கிடைக்காவிட்டால் ஒரு பெரிய பிள்ளையார் படம் போதுமானது. இவ் விழாவின் கருத்தோடொன்றிய விதத்தில் அவ்வழிபாட்டிடம் அமைக்கப்படுகிறது. அலங்கரிக்கப்படுகிறது. கணேசப்பெருமான் எப்பொழுதும் காட்டிலிருந்து வருவது போலச் சித்தரிக்கப்படுவதால் பைன் மரக்கிளைகள் அல்லது வாழையிலைகள் உபயோகிக்கப்படலாம். அருகம்புல் கரும்பு மோதகமாலை என்பன உபயோகிக்கப்படுகின்றன. சிமிட்டும் மின்விளக்குகள் காக்காய்ப்பொன் சரங்கள் இன்னும் பன்னிறத்தொங்கு தோரணங்களும் சேர்த்துக் கொள்ளப்படலாம். ஒவ்வொரு நாள் காலையிலும் பஞ்சகணபதி குறிப்பிட்ட ஒரு நிறத்தில் அலங்கரிக்கப்படுகிறார். இதனை சிறுவர்களே செய்வது விரும்பத்தக்கது. அவருடைய ஐந்து சக்திகளும் வீட்டிலுள்ள எல்லோராலும் விரும்பிப் போற்றப்படுகின்றன.

டிசம்பர் 21ல்: பொன்மஞ்சள் வண்ணத்தில் பொலிகிறார்

டிசம்பர் 22ல்: றோயல் நீல ஆடை பரிசளிக்கப்படுகிறது

டிசம்பர் 23ல்: செம்பவள வஸ்திரம் பரிசளிக்கப்படுகிறது

டிசம்பர் 24ல்: மரகதப்பச்சையில் மிளிர்கிறார்

டிசம்பர் 25ல்: அடுத்தாண்டு பஞ்சகணபதி ருபத்தில் திரும்பவும் தோற்றும்வரைசெல்வமும் செழிப்பும் அளிக்கவென செம்மஞ்சள் வண்ணத்தில் பிரகாசிக்கிறார்.

பஞ்சகணபதி குறிப்பிட்ட தனித்துவமான இந்து முறைப்படியே கொண்டாடப்பட வேண்டும். மற்றச் சமயத்துச் சின்னங்கள் சந்தா கிளவுஸ் கிறிஸ்மஸ்மரம் என்பவை உபயோகிக்கப்படக் கூடாத பொருள்களாகும். இந்து வழிபாட்டுமுறைப்படி தவிர்க்கப்பட வேண்டிய தாத்பரியங்களை இவ்வடையாளங்கள்

உள்ளடக்கியிருக்கின்றன. பஞ்சகணபதி வாழ்த்துமடல்கள் அவற்றின் அமைப்பிலும் உள்ளடக்கத்திலும் இந்துவாக இருப்பது அவசியம்.

இந்துசமய தத்துவஞானம் அல்லது இந்துசமய நூல்களின் மேற்கோளுடனான வாழ்த்துமடல்கள் வேற்றுமத நண்பர்களுக்கு அனுப்பப்படலாம். முறையாகத் தெரிவுசெய்யப்படுமிடத்து அவை பாராட்டப்படும். போற்றப்படும்.

## பஞ்சகணபதி செயற்பாடுகள்

இது குடும்பத்தினர்க்கான ஒரு மகிழ்ச்சிகரமான காலமாகையால் அக்காலத்தில் உல்லாசப் பயணங்கள் விருந்துபசாரங்கள் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் அலுவலக சகபாடிகள் என்பவர்களுடன் வாழ்த்துமடல்கள் பரிசுப்பொருள்கள் பரிமாறிக்கொள்ளல் என்பவை இடம்பெறவேண்டும். ஒவ்வொருநாளும் பழங்கள் இனிப்புவகைகள் வாசனைத்திரவியங்கள் என்பன பஞ்சகணபதி முன் பாரம்பரியமுறையில் படைக்கப்படுகின்றன. அந்தந்த வீட்டுக்குழந்தைகளே அவற்றை தயார் படுத்தி அர்ப்பணிக்கலாம். ஐந்து நாட்களும் குழந்தைகளுக்கு பரிசுகள் அளிக்கப்பட வேண்டும். அவர்கள் அவற்றைத் திறந்து பார்க்காமலே பஞ்சகணபதி முன் வைப்பார்கள். ஒவ்வொரு பூசை முடிவிலும் சாமித் தட்டிலிருந்து இனிப்புவகைகள் பிரசாதமாக வழங்கப்படும். ஐந்து நாள் பஞ்சகணபதி காலத்தில் அவரைப் போற்றிப் புகழ்ந்து பஜனைப்பாடல்கள் பாடப்படும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக வேறு வேறு சாதனைகள் முன்வைக்கப்படுகின்றன. முதலாவது சாதனை டிசம்பர் 21ம் திகதி காலை ஆரம்பிக்கிறது. தொடர்ந்து கடைசி 25ம் திகதி வரை ஒவ்வொரு நாளும் நடைபெறுகிறது.

## நாளாந்த சாதனைகள்

### டிசம்பர் 21:

பஞ்சகணபதி முதல் நாளுக்கான சாதனை குடும்ப அங்கத்தவரிடையே அன்பும் இணக்கமும் கலந்த ஓர் உணர்வலையை உருவாக்குவதாகும். அன்று காலை குடும்ப அங்கத்தவர் யாவரும் முன்னதாகவே எழுந்து வழிபாட்டிடத்தை அமைப்பதிலும் அதனைச் சமயச் சின்னங்கள் றங்கோலி தீபங்கள் கொண்டு அலங்கரிப்பதிலும் ஈடுபடுகின்றனர். அது முடிந்ததும் பஞ்சகணபதி அருட்சக்தியை வேண்டிப் பெரிய அளவில் ஒரு வழிபாடு செய்யப்படுகிறது. அன்றைய சாதனை அத்துடன் ஆரம்பிக்கிறது. குடும்பத்தவர்க்கிடையில் அந்தவருட காலத்தில் ஏற்பட்ட சச்சரவுகள் உறவுவிரிசல்கள் என்பவற்றைச் சரிசெய்ய அமர்கின்றனர். இதுவரை ஒருவர்க்கொருவர் ஏற்படுத்திய தவறுகள் ஏளனங்கள் மனவருத்தங்கள் என்பவற்றுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றனர். ஒருத்தருக்கு கொருத்தர் மன்னிப்பு வழங்கியதும் ஒவ்வொருவரும் மற்றவர்களில் காணப்படும் மேன்மையான குணங்களைப் போற்றிப் பேசி உற்சாகப் படுத்துகிறார்கள். இன்னொரு வரைத் திருத்த முயல்வதை விடத் தன்னைத் தானே திருத்தி ஓர் அமைதியான உதாரணமாகத் திகழவேண்டியதன்

நடைமுறைத் தேவையை ஞாபகப் படுத்திக் கொள்வர். பின்னர் பரிசுகள் பகிரப்படும். ஆவை பஞ்சகணபதி முன் வைக்கப்படும். குடும்ப இணக்கம் இந்துக்கள் யாவருக்கும் மிக முக்கியமானது. இந்தச் சாதனையை மிகக் கடுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

## டிசம்பர் 22:

இரண்டாவது நாளுக்கான குடும்ப சாதனை அயலவர் உறவினர் நண்பர்களுடன் அன்பிணக்கம் ஏற்படுத்திக் கொள்வதாகும். ஆயல் வீட்டுக்காரருக்கும் அயலில் வசிக்கும் உறவினர்க்கும் நண்பர்களுக்கும் பரிசுகள் அளிக்கும் நாளாகும். அவர்களிடம் மன்னிப்புக் கேட்டலும் தப்பெண்ணங்களைத் தெளிவுபடுத்தலும் இன்றைய சாதனையாகும். தூரத்திலுள்ள உறவினர்கள் நண்பர்களுடன் கடிதமூலம் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மன்னிப்புக் கேட்கப்படும்
மன உளைச்சல் தீர்க்கப்படும். பரிசுப் பொருட்கள் மூடியபடியே வைக்கப்படுகின்றன.

## டிசம்பர் 23:

மூன்றாம் நாளான இன்றைய குடும்ப சாதனை அலுவலகச் சகபாடிகள் தற்செயலாகச் சந்திக்கும் வியாபாரிகள் பொதுமக்கள் ஆகியோருடன் அன்பிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதாகும் வியாபாரிகளும் பாவனையாளர்களும் ஒருத்தருக் கொருத்தர் பரிசளித்துக் கௌரவித்துக் கொள்ளும் நாளாகும். இன்றைய தினத்துக்கான சாதனை கடன்களையும் பிரச்சனைகளையும் சரி செய்து தீர்த்தலாகும்.

## டிசம்வர் 24:

நாலாவது நாளுக்கான சாதனை சங்கீதம் நடனம் நாடகம் கலை என்பவற்றின் ஆனந்தத்தை முன்னெடுத்து அன்பிணக்கத்தை வளர்த்தலாகும். குடும்பத்தவர்கள் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் தத்தமது கலைத்திறன்களை பங்கிட்டு ஆனந்திக்க ஒரு சத்சங்கமாக ஒன்று கூடுகிறார்கள். நிகழ்ச்சிகள் முடிவடைந்ததும் இந்துதர்மத்தின் பாரம்பரியப் பெறுமதிகள் பற்றிக் கலந்துரையாட உட்காருகிறார்கள். பின்னர் கலை கலாச்சாரப் பாரம்பரியங்களின் காவலனாகிய பஞ்சகணபதியின் முன்னிலையில் அடுத்த வருடத்தில் எவ்வாறு பண்பட்டவாழ்வுமுறைகளைக் கடைப்பிடிக்கலாம் என்று திட்டம் தீட்டப்படுகிறது.

## டிசம்பர் 25:

கடைசி நாளான ஐந்தாவது நாளின் சாதனை யாவது மூன்றுலகங்களிடையேயும் அன்பும் இணக்கமும் ஏற்படச் செய்தலாகும். முதல் நான்கு நாட்களிலும் முறைப்படி சாதனை செய்ததன் பயனாகக் குடும்பத்தவர் திறந்தமனத்தவராய்க் கணபதி கருணையை உணர்ந்தவராகிறார். அவர்கள் அன்பு கட்டுமீறிப்பாய்கிறது. கடவுளிடமிருந்து வரும் உச்சக்கட்ட அன்பையும்  அமைதி சாந்தத்தையும்

அனுபவிக்கிறார்கள். அவருடைய அருளாசி அவ்வில்லத்தையும் அங்குள்ளோர் இதயங்களையும் நிறைக்கிறது. குடும்பத்தவர்க்கும் இறைவனுக்கு மிடையிலான இவ்வன்புப்பரிமாற்றம் அன்றையதினம் ஆற்றப்படும் ஐந்துவேளை விசேட பூசை மூலம் உருவாக்கப்பட்டு நிலைநிறுத்தப்படுகிறது.

முதலாவது பூசை: காலை 6.00 மணி பூசைக்கு முன் தனிப்பட்ட பூசைத்தட்டங்கள் தயார் செய்யப்பட்டு அர்ப்பணிக்கப்படுகின்றன. பூசையின் பின் கடந்த வருடகாலத்தில் வழிபாடுகள் வேண்டுதல்கள் எவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளன என்று ஒவ்வொருத்தரும் தத்தம் அனுபவங்களின் சாட்சியங்கள் பகர்கிறார்கள். நற்சாட்சியங்களைக் கேட்பது ஒவ்வொருவருடைய நம்பிக்கையையும் பலப்படுத்துகிறது. பின் தாங்கள் செய்யக் கூடிய தியாகங்கள் பற்றிய விரதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. புகைத்தலை நிறுத்துதல் அல்லது பிற தீய பழக்கங்ளைத் திருத்திக்கொள்ளல் போல விரதங்கள் ஒரு தனிமனிதனின் வாழ்வியல் தரத்தை உயர்த்த வேண்டும்.

இரண்டாவது பூசை 9.00 மணி

மூன்றாவது பூசை 12.00 மணி

நாலாவது பூசை 3.00 மணி

மாலை 6.00 மணிக்கு ஐந்தாவதும் கடைசியுமான பூசை இடம்பெறும்.

பஞ்சகணபதிக்கான இவ்வைந்து பூசைகள் மூலம் இல்லத்திலுள்ள தேவர்களின் உதவிக்காகப் பிரார்த்திக்கப்படுகிறது. குடும்ப வாழ்வில் முன்னேற்றங் காணக்கூடிய வகையில் வாழ்க்கைமுறை மாற்றியமைக்கப்படுகிறது.

இன்று உணரப்படும் கரைகடந்த அன்புவெள்ளம் அடுத்துவரும் ஆண்டில் தாராளத்தன்மையைத்தூண்டும். அதன்மூலம் பெருஞ்செல்வமும் சீரிய திட்டமும் கிடைக்கும். பரிசுகள் திறக்கப்படாமலே பஞ்சகணபதி முன் வைக்கப்படுகின்றன. மாலை வழிபாடு 6.00 மணிக்கு நடைபெறுகிறது. இதுவே நெடுநேரமாக எதிர்பாரக்கப்பட்ட வேளையாகும். ஐந்து சாதனைகளும் இப்போது நிறைவு பெற்றுவிட்டன. ஒவ்வொருவருள்ளத்திலும் அமைதி அன்பு இணக்கம் திரும்பப்பெறப்பட்டுள்ளன. பூசையின் பின்னர் ஆனால் பெரிய விருந்தின் முன்னர் பஞ்சகணபதி தன் இறுதித் தரிசனத்தைத் தருகிறார். பிரசாதத்தையும் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கிறார். பரிசுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஆனந்தமாகப் பிரித்தறியப்படுகின்றன.

ஆனந்தமான குழைந்தைகள்
ஆனந்தமான பெற்றோர்
ஆனந்தமான இறைவன்

## பஞ்சகணபதியின் பின் குடும்பப்பிரார்த்தனை ஒன்று

அடுத்த 360 நாட்களும் பின்வரும் பஞ்சகணபதி பிரார்த்தனை நாள்தோறும் பாடிப் பரவசம் அடையுங்கள். எல்லையற்ற ஆனந்தத்தோடு

அவனருட்பிரவாகம் உங்கள் இல்லங்களை நிறைக்கட்டும். அடுத்து வரும் மாதங்களில் அவனுங்களுக்கு அளிக்க இருக்கும் பெரும் செல்வம் முதிர்பண்பாடு மற்றவரின் உணர்வுகளை புரிந்துகொள்ளும் சாமர்த்தியம் ஆகிய அவன் திருவருட்ச்செல்வங்களை நீங்கள் உங்கள் குடும்பத்தினரும் நன்கு அனுபவிப்பீர்களாக.
அடுத்தாண்டு பஞ்சகணபதி ரூபத்தில் கணேசப் பெருமான் உங்கள் இல்லங்களில் எழுந்தருளும்வரை நாள்தோறும் உங்கள் பூசையறையில் வழிபாடு முடிந்ததும் இப்பிரார்த்தனையை எல்லோரும் சேர்ந்து பாடி மகிழுங்கள்.



மூவுலகின் தேவர்களே
ஒற்றைக்கொம்பனின்
ஒள்ளிய தரிசனத்தில்
சற்றெம் மனங்கள்
சலனம் ஒழியட்டும்.

வளைந்த தும்பிக்கையுடை
யானைமுகத்தோனை
மனத்தில் தியானிப்போம்.

என்றும் எமையவன்
நல்வழியில் நடத்தட்டும்
தேவரின் தலைவனே வாழ்க
கணங்களின்பதியே வெல்க
பஞ்சமுககணபதியே வாழ்க.

– மங்களம் –

ஆக்கியளிப்பவர்: குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்
தமிழில் தருபவர்: சின்னையா சிவஞானசுந்தரம்